**தலைப்பு 173 – அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 27 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக செய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 223,680,000 ஆக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 178,288,073 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா45,391,927 தொகை அதாவது 20 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவின விபரம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டு வருபவை | 121,880,000 | 114,656,409 | 7,223,591 | 06 |
| மூலதனம் | 101,800,000 | 63,631,664 | 38,168,336 | 37 |
| மொத்தம் | 223,680,000 | 178,288,073 | 45,391,927 | 20 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 03 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,250,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 12 செலவின விடயங்களிற்காக மிகை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அச்செலவின

விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டின் 24 சதவீதத்திற்கும் 91 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுக்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 17301 | 2,555,000 | 2,553,459 | 1,000,000 | 1,447,137 | 8,500,000 | 6,205,164 |

17301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 6,205,164 கூட்டுமொத்தமாக இருந்தது.

**(இ) கட்டுநிதிக் கணக்குகள்**

அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கு மீதி ரூபா 4,160,416 ஆகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக 08 பதவிநிலையற்ற உத்தியோகத்தர்களிற்கு 24 சந்தர்ப்பங்களில் கூட்டுமொத்தமாக ரூபா 230,695 உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் கருமம் முடிவுற்றவுடன் பெறப்பட்ட செயல் நிமித்த உப கட்டுநிதிகள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், கருமம் முடிவுற்று 01 முதல் 10 மாதங்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் உப கட்டுநிதிகள் தீர்க்கப்பட்டிருந்தன.

(iii) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கக்கூடிய உச்ச உப கட்டுநிதித் தொகை ரூபா 20,000 ஆக காணப்பட்ட போதிலும், அந்த பிரமாணங்களுக்கு முரணாக 19 சந்தர்ப்பங்களில் 12 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 20,000 இனை விஞ்சி ரூபா 677,150 உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 693,107 கூட்டுத்தொகையாக காணப்பட்டது. அதில் 2 ஆண்டுகளைக் கடந்த ரூபா 446,136 மொத்தமான 7 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

அமைச்சு இயங்கிவருகின்ற செத்சிரிபாய II ஆம் கட்டத்தின் 6 ஆவது மாடியிலுள்ள இடப் பரப்பளவில் ¼ பங்கான அதாவது 5,450 சதுர அடி இடப் பரப்பளவு மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்து 2014 நவம்பர் 01 ஆந் திகதி வரை 23 மாதங்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

**(ஆ) வருடாந்தப் பொருள் மெய்மையாய்வை நடாத்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎவ்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க பொது நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் 2014 மே 02 ஆந் திகதி அவ்வறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் களஞ்சியத்தில் காணப்பட்ட இருப்புக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வுச் சபை அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 859,371 ஆனதுடன் அப்பொறுப்புக்கள் ஒரு ஆண்டினை விட குறைவான காலமாக காணப்பட்டு வருகின்ற மீதியாகும்.

## 1.5 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களின் அலுவலகங்கள் கூடியளவில் அரசாங்கத்திற்கு அல்லது கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்பட வேண்டிய போதிலும், அதனுடன் இணங்கி ஒழுகாது அமைச்சினால் நுவரெலியா செயற்திட்ட அலுவலகத்திற்காக வெளியார் நிறுவனமொன்றிடமிருந்து ரூபா 676,500 தொகைக்கு கட்டிடமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 1.6 செயலாற்றல்

2013 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

முகாமைத்துவ மறுசீரமைப்பின் ஊடாக அரசாங்க நிறுவனங்களின் செயலாற்றலை மேம்படுத்தும் நோக்குடன் நான்காண்டு கால திட்டமொன்றை தயாரிப்பதற்காக வெளிவாரி மதியுரை நிறுவனமொன்றுக்கு ரூபா 1,944,000 வேலை ஆரம்பித்தல் முற்பணமொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை அப் பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திட்டமிடல்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைவாக செயற்பட்டிருக்காமை.**

அரசாங்க முகாமைத்துவ அமைச்சினுள் அலுவலக முறைமையினை பலப்படுத்தல் மற்றும் "செயார் பொயின்ட்" மென்பொருளை பயன்படுத்தி தீர்வை தேடுகின்ற செயற்திட்டத்திற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 1,000,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த எல்லையினை ரூபா 3,340,564 இனால் விஞ்சி ரூபா 4,340,564 செலவிடப்பட்டிருந்தது.

**1.7 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

மீளாய்வாண்டின் சனவரி 10 ஆந் திகதியிலிருந்து மார்ச் 31 ஆந் திகதி வரையான காலத்திற்காக பத்தரமுல்லை செத்சிரிபாய II ஆம் கட்டத்தின் 06 ஆவது மாடிக்காக ரூபா 11,746,636 கட்டிட வாடகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன், அக் காலத்தினுள் அமைச்சின் அலுவலகம் வேறொரு தனியார் கட்டிடத்தில் இயங்கியிருந்தது.

**1.8 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 10 | 4 |
| (ii) | மூன்றாம் நிலை | - | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 100 | 41 | 59 |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 16 | 8 |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 04 | 04 | - |
| | மொத்தம் | 142 | 71 | 71 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 71 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.